**E.P.59/2024 in OS. 64/2016** மசா**.1-**பழனிச்சாமி **15.11.2024**

சாட்சி முன்னிலையாகி, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

பவித்திரம் கிராமத்தில் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட சொத்து மானாவாரி நிலம் என்றால் சரியல்ல. அந்த நிலத்தில் எதிர்மனுதாரருக்கு விவசாயம் கிடையாது என்றும், வருமானம் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. எதிர்மனுதாரருக்கு கரூரில் கதவு எண். 242/2ல் ரூ.2 கோடி மதிப்புள்ள சொத்து உள்ளது என நான் சொல்வதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிர்மனுதாரருக்கு நான் சொல்வதுபோல் வீடு கிடையாது என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் வேல்முருகன் டிரான்ஸ்போர்ட் என்ற பெயரில் தொழில் செய்து, மாதம் ரூ.1 கோடி வருமானம் ஈட்டுகிறார் என நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண். 65/2016 வழக்கு தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்ட வழக்கும் சேர்ந்து பொது தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்றால் அசல் வழக்கு எண். 65/2016 வழக்கிற்கும் எனக்கும் சம்மந்தமில்லை. நான் முதல்விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சொத்தை எதிர்மனுதாரர் அசல் வழக்கில் தீர்ப்பாணையை நிறைவேற்றுவதற்காக செக்யூரிட்டியாக கொடுத்துள்ளார். எதிர்மனுதாரர் தாக்கல் செய்த மேல்முறையீட்டு பரிகாரத்தை பெறவிடாமல் தடுப்பதற்காக நான் இம்மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நிறைவேற்று மனுவில் கலம் 7, 8ல் குறிப்பிட்டுள்ள தொகை விவரம் தவறு என்றால் சரியல்ல. எனது முதல்விசாரணை வாக்குமூலத்தில் கூறியுள்ள விவரங்கள் அனைத்தும் தவறானது என்றால் சரியல்ல. நிறைவேற்றுதல் மனு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

ஒம்/-ஆர்.சண்முகசுந்தரம்

**மறு விசாரணை** - இல்லை.

முதன்மை மாவட்ட நீதிபதி,

கரூர்